மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: சுற்றுலாத் துறை ஆண்டுக்காண்டு ஓரளவிற்கு வளர்ச்சி பெற்றுக் கொண்டுதான் வருகிறது. போதுமான அளவிற்கு வளர்ச்சி பெற்றிருக்கிறதா என்றால் கிடைக்கிற நிதி வசதி மிகக் குறைவாக இருக்கிறது. அகில இந்திய அளவிலானாலும் சரி, மாநில அளவிலானாலும் சரி எவ்வளவுக்கெவ்வளவு நிதி வசதி அதிகமாகக் கிடைக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு வசதி வாய்ப்புகளை அதிகமாகப் பெருக்கமுடியும். மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைவிட இப்போது நாளுக்கு நாள் சுற்றுலாத் துறையின் மூலம் ஏற்படுகிற வசதி வாய்ப்புகள் நிரம்ப வந்துகொண்டிருக்கின்றன. சுற்றுலாப் பயணிகள் தங்கி பார்ப்பதற்கேற்ற இடங்கள் ஏராளமாக இருக்கின்றன. அவற்றை பல்வேறு வகைகளில் தொகுத்து வைக்கும் முயற்சியில் ஈடுபட்டு இருக்கிறது. வழிகாட்டிகளாக இருப்பவர்களுக்கு தனிப் பயிற்சி அளிக்க சுற்றுலாத் துறையினர் ஈடுபட்டு வருகிறார்கள். தனிப் பயிற்சி அளிக்கப்பட்டவர்களைப் பயன்படுத்திக்கொள்ளும் சூழ்நிலை எதிர் காலத்தில் ஏற்படும் என்ற நோக்கத்தில் சுற்றுலாத் துறையினர் அதற்கான கவனத்தைச் செலுத்தி வருகிறார்கள்.

கோவை மாவட்டத்தில் பணிபுரியும் மகளிர் இல்லங்கள்

***764 வினா—திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் வினா எண் 560-க்கு, 29—3—1973-ல் அளிக்கப்பட்ட விடையையொட்டி, தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டத்தில் பணிபுரியும் மகளிர்களுக்கான இல்லங்கள் எத்தனை எங்கெங்கு அமைந்துள்ளன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: கோவை மாவட்டத்தில் பணிபுரியும் மகளிர்களுக்கான கீழ்க்கண்ட இல்லங்கள் இரண்டு உள்ளன:—

(1) மகளிர் இல்லம், 18, மேற்கு லோகமான்ய தெரு, ஆர்.எஸ். புரம், கோயம்புத்தூர்.

(2) கிருத்துவ இளம் மகளிர் இல்லம், அவினாசி சாலை, கோயம்புத்தூர்.

மேலே முதலாவதாகக் குறிக்கப்பட்டுள்ள இல்லத்தை மூடிவிட உத்தேசித்திருப்பதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவரவர்களே, இந்த இல்லங்களில் மகளிருக்கு என்னென்ன வசதிகள் குறைவாக இருக்கின்றன? கோவையில் உள்ள இல்லத்தை மூடுவதாகத் தெரிவித்தார்கள். மூடவேண்டிய அவசியம் என்ன? வேறு நகரத்திற்கு, திருப்பூர் போன்ற நகரத்திற்கு, மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

1974 ஏப்ரல் 11]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தண்ணீர் வசதி அதிகமாக இல்லாத காரணத்தால் அங்கே வந்து தங்கி வசதி பெறுகிறவர்கள் தங்க மறுக்கிறார்கள். ஐந்து பேர் இருக்கிறார்கள். எனவே தான், அதை வேறு இடத்திற்கு மாற்ற உத்தேசிக்கப்பட்டு இருக்கிறது.

காரையூர் மீனவர்களுக்கு வீட்டு மனைகள்

* 765 வினா.—**திரு. க. சுப்பு :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமேஸ்வரம் காரையூரில் வசிக்கும் மீனவர்கள் வீட்டு மனைகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலங்கள், அளவிடப்பட்டு, அவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளனவா?

(இ) இல்லையெனில், தாமதத்திற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மீனவர்களின் வீட்டுமனைக்கென்று ஒதுக்கப்பட்ட 1.26 ஏக்கர் பரப்புள்ள நிலம் வருவாய்த்துறையால் இன்னும் உட்கோட்டம் செய்யப்படாமலும், எல்லை வகுக்கப்படாமலும் உள்ளது. இது குறித்து ராமநாதபுரம் மாவட்டம் ஆட்சித் தலைவரிடமிருந்து கேட்கப்பட்டுள்ள அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. எஸ். வடிவேல் : தலைவரவர்களே, ராமேஸ்வரம், தனுஷ்கோடி என்ற இடத்தில் பாதி கட்டிடங்கள் இடிந்தும், பாதி கட்டிடங்கள் நல்லவையாகவும் இருக்கின்றன. அது மத்திய அரசுக்குச் சொந்தமா, மாநில அரசுக்குச் சொந்தமா என்று எனக்குத் தெரியவில்லை. மாநில அரசுக்குச் சொந்தமாக இருந்தால், அதிலே மீனவர்கள் குடியிருப்புக்கு நல்ல வசதி இருக்கிறது. அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள மாநில அரசு முற்படுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இது காரையூர் கிராமத்தில் அவர்களுக்கு என்று இடம் எடுத்தாகிவிட்டது. வருவாய்த் துறை கோடிட்டு பகிர்ந்து அந்த நிலத்தைக் கொடுக்கவில்லை. அதனால் தான் இப்போது நிலுவையில் இருக்கிறது.

Coffee Plantations

* 766. *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state :

(*a*) whether the Government have proposed to raise any coffee plantations in this State; and

(*b*) if so the details thereof?